# மெட்ரோ ரெயில் திட்ட செயலாக்கம் குறித்து அமைச்சர் ஆய்வு

சென்னை, ஜன.29-

சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில் நேற்று மெட்ரோ ரெயில் திட்ட செயலாக்கம் குறித்து தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மெட்ரோ ரெயில் கட்டம் 1-ன் நீட்டிப்பு பணிகள் மற்றும் கட்டம் 2-ன் முன்னேற்பாடு பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் கட்டம் 1-ன் நீட்டிப்பு பணிகளை உரிய காலத்துக்குள் விரைந்து முடித்து பயணிகள் சேவையை தொடங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இதையடுத்து மெட்ரோ ரெயில் பயணிகளுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள், இணைப்பு சேவை வசதிகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் பங்கஜ் குமார் பன்சல் மற்றும் இயக்குனர்கள் சுஜாதா ஜெயராஜ், ராஜீவ் நாராயண் திவேதி, நரசிம்பிரசாத், தலைமை பொது மேலாளர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.